Registered No. M 5068

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 | சர்வதாரிஹு ஆவணிமீ 22உ 6—9—1948 ஹிஜ்ரி 1367 துல்கஃதாமீ 2உ திங்கட்கிழமை. | இதழ் 32

## பாபுஜி கண்ணோட்டத்தில் இன்றைய பிரச்னைகளுக்குப் பரிகாரம்.

அறுபது வருஷ போராட்டத்துக்குப் பிறகு சுதந்திரமடைந்து விட்டோம். விடுதலைக்குப் பிறகு பல முக்கிய பிரச்னைகள் எழுந்துள்ளன. சிறந்த முறையில் அவை தீர்க்கப்படுவதன் மூலமே சுதந்திரம் பாதுகாக்கப்பட முடியும். மஹாத்மாஜீ தலைமையில் சுதந்திரம் கிடைத்தது. அத்துடன் எழுந்த பிரச்னைகளை தீர்க்கவும் அவருடைய தலைமை அவசியமாயிருந்தது ஆண்டவன் சங்கல்பத்தால் பாபூஜீ நம்மை விட்டுப்பிரிந்து விட்டார். இன்று தீர்க்கப்பட வேண்டியிருக்கும் பிரச்னைகளில் கிட்டத்தட்ட எல்லாமே பாபூஜீ உயிருடனிருந்த அன்றும் இருந்தன. அவைகளை பாபூஜீ பிராத்தனை கூட்டங்களில் தெளிவாக்கியுமிருக்கிறார். நேர்வழி காட்ட இன்று நம்மிடையே பாபூஜீ இல்லையாயினும் பாபூவின் உபதேசங்கள் இருக்கின்றன. அவைகளை அடிப்படையாகக் கொண்டு நம் வழியை நாம் நிர்ணயிக்க முடியும். எனவே இன்றைய சிக்கலான பிரச்னைகளுக்கு பாபூஜீ காட்டிச் சென்ற பரிகாரத்தை நினைவூட்டுகிறோம்.

— ஆசிரியர்.

### காஷ்மீரும் ஹைதராபாதும்.

பொதுமக்களின் இஷ்டம் அறியாமல் இரண்டு டொமினியன்களில் ஏதாவது ஒன்றுடன் இணைய காஷ்மீர மஹாராஜாவுக்கோ அல்லது ஹைதராபாத் நிஜாமுக்கோ உரிமையில்லை. எனக்குத் தெரிந்தவரை காஷ்மீரைப் பொறுத்து இவ்விஷயம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்திய யூனியனுடன் இணைய மஹாராஜா மட்டும் விரும்பியிருந்தால் அதை ஒருக்காலும் நான் ஆதரித்திருக்கமாட்டேன். காஷ்மீர் இணைப்பு நிபந்தனைக்குட்பட்டது. மஹாராஜாவும் ஷேக் அப்துல்லாவும் ஜம்மு காஷ்மீர் மக்கள் சார்பில் விருப்பம் தெரிவித்ததின் பேரிலேயே இந்திய சர்க்கார் சம்மதித்தது.

—பிரார்த்தனை கூட்டம். 11—11—47.

### காஷ்மீரில் இந்திய ராணுவம்.

இந்திய ராணுவம் தன்னிச்சையாக காஷ்மீரில் பிரவேசிக்கவில்லை எனக்குத்தெரிந்தவரை சமஸ்தானாதிபதி, காஷ்மீர் முஸ்லிம்களின் தலைவர் ஷேக் அப்துல்லா இவ்விருவரின் அழைப்பின்பேரிலேயே பிரவேசித்திருக்கிறது. படையெடுத்து வந்த மலை ஜாதியினரும் மற்றவர்களும் வாபஸாய், பூஞ்ச் கிளர்ச்சிக்காரர்களுக்கும் காஷ்மீருக்குமிடையே பிரச்னை விடப்பட்டு கிளர்ச்சிக்காரர்களுக்கு கிடைத்து வரும் வெளியுதவியும் நின்ற பிறகு இந்திய ராணுவத்தை வாபஸாகும்படி சொல்ல முடியும்.

— பிரார்த்தனை கூட்டம். 20—1—48.

### ஜூனாகட்.

நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் ஹிந்துக்களாய் இருப்பதாகச் சொல்லப்படும் தன்னுடைய பிரஜைகளின் இஷ்டமில்லாமல் பாகிஸ்தானில் சேர ஜூனாகட் நவாப் சாஹிபுக்கு எவ்வித உரிமையுமில்லை. இரண்டு டொமினியன்களில் ஏதாவது ஒன்றுடன் சேரமுடிவுசெய்யும் உரிமை யாருக்காவது உண்டென்றால் அது பிரஜைகளுக்கேயாகும். பொதுமக்கள் ஆதரவை இழக்கும்போது ஜூனாகட் இடைக்காலசர்க்காரைவெளியில் தள்ளுவது இரண்டு டொமினியன்கள்

மீதும் உள்ள கடமை. இணையும் விஷயத்தில் சமஸ்தானதிபதியின் தனிப்பட்ட சம்மதத்தை நியாயமென்று எந்த டொமினியனும் உலகுக்கு நிரூபிக்க முடியாது.

— பிரார்த்தனை கூட்டம். 11—11—47.

## இந்திய ராணுவம் காஷ்மீரில்.

மக்களும் மஹாராஜாவும் கேட்டுக்கொண்டதன் பேரில் அழகான காஷ்மீர் பள்ளத்தாக்கை பாதுகாக்கவே இந்திய ராணுவம் காஷ்மீர் சென்றது. காஷ்மீரின் உண்மையான அரசர் ஷேக் அப்துல்லாதான். அதுவே என் அபிப்பிராயம். முஸ்லிம்களிடமும் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலிருக்கும் முஸ்லிமல்லாதாரிடமும் ஷேக் அப்துல்லாவுக்கு இருந்துவரும் அபார செல்வாக்கை காஷ்மீரிலிருந்து வரும் ஒவ்வொருவரும் எனக்குச் சொல்லியிருக்கின்றனர். இங்கிலாந்து அரசரைப் போலவே இந்திய சமஸ்தானதிபதிகளும் இனி பெயரளவுக்கே அரசர்களாவர்.

— பிரார்த்தனை கூட்டம். 25—12—47.

## பாகிஸ்தானுக்கு.

இன்றைய நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து எதுவரை ஹிந்து சீக்கியர்கள் திரும்பிவந்து அமைதியாக வசிக்கமாட்டார்களோ அதுவரை நிம்மதியுடன் உட்கார மாட்டோமென்று பாகிஸ்தான் உள்ள சுத்தியுடன் சபதம் செய்யவேண்டும் இதேமாதிரியான அந்தரங்க சுத்தி இந்தியா முழுதும் ஏற்படும் பட்சத்தில் பாகிஸ்தான் பாக் (சுத்தம்) ஆகிவிடும். பிறகு நடந்தேறிய சம்பவங்கள் புதையுண்டு கடந்தகால மனக்கசப்புக்கள் மறைந்து காய்தே ஆஜம் ஜின்னாவின் உயிரும் உடைமையும் காக்கப்படுவது போலவே ஒரு கீழ்தர பிரஜையின் உயிரும் உடைமையும் பாதுகாக்கப்படும் ஒரு ஆட்சியாகவே பாகிஸ்தான் விளங்கும். அவ்வித பாகிஸ்தானுக்கு எப்பொழுதும் அழிவில்லை.

— பிரார்த்தனை கூட்டம். 14—1—48.

## இந்திய யூனியனுக்கு.

மற்றவர்கள் எப்படி நடந்து கொண்டாலும் அதற்காகவென்று தன் கொள்கையை மாற்றிக்கொண்டு இந்திய யூனியனும் வகுப்பு வாதத்திலிறங்க வேண்டுமென்று நான் விரும்பமாட்டேன். ஒவ்வொருவரும் நன்மையைப் பின்பற்ற வேண்டுமேயல்லாது தீமையையல்ல.

## இந்திய முஸ்லிம்கள் செய்ய வேண்டியதென்ன?

பாகிஸ்தான் பெரும்பான்மை முஸ்லிம்களை விட்டுப் பிரிந்து இந்திய முஸ்லிம்கள் இன்று சிறுபான்மையினராகிவிட்டனர். இருப்பினும் அஹிம்ஸையை கடைப்பிடித்தால் இன்றைய மாறுபட்ட நிலைமையில் அவர்களுக்கு எவ்விததீங்கும் ஏற்படமுடியாது. எவ்வளவுதான் சிறுபான்மையினராக இருப்பினும் அவர்களுடைய சமூக வாழ்க்கை பாதிக்கப்பட மாட்டாது. தன்னை சிருஷ்டித்த நாயனை உணர்ந்த பிறகு ஒருவனின் சுயமரியாதையை யாராலும் பறிக்கமுடியாத நிலையில் இயற்கையாகவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான்.

— பிரார்த்தனை கூட்டம். 22—12—47.

## ஹிந்து, சீக்கியர்களுக்கு.

டில்லியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் ஹிந்து, சீக்கியர்கள் இந்தியாவுக்கும் தங்கள் மதத்துக்கும் தீமையே விளைவிக்கின்றனர். அதனால் என்மனம் வேதனையடைகின்றது.

— பிரார்த்தனை கூட்டம். 13—1—48.

## மதம்.

எல்லா தேசீய வாதிகளும் அரசியலில் மதத்தை புகுத்தாம விருப்பதையே நான் விரும்புகிறேன். மதம் ஒரு தனிப்பட்ட விஷயம். அது தனி நபர்களுடனேயே சம்மந்தம் கொண்டிருக்கிறது.

— பிரார்த்தனை கூட்டம். 11—1—48.

## மதம் கற்றுக்கொடுப்பது என்ன?

சமாதானத்தையும் அன்பையுமே ஒவ்வொருமதமும் போதிக்கின்றது. வெறுப்பு, சகியாத்தன்மை எல்லா மதங்களுக்கும் புரப்பாகும்.

— பிரார்த்தனை கூட்டம். 18—12—47.

## புனிதஸ்தலங்கள்

மதசம்பந்தமான புனிதஸ்தலங்கள் கேவலப்படுத்தப்படுவதை எவ்விதத்திலும் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று இந்தியா பாகிஸ்தான் சர்க்கார்கள் தங்களிடமுள்ள பெரும்பான்மையினருக்கு அறிவிப்பதுடன் பாதிக்கப்பட்ட வணக்க ஸ்தலங்களை செப்பனிடும் செலவை அவர்களே ஏற்கவேண்டுமென்றும் அறிவிக்கப்படவேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம். 23—12—47.

## சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் காரர்களுக்கு உபதேசம்

காங்கிரஸ் காரர்கள், சோஷலிஸ்டுகள் கம்யூனிஸ்டுகள் இந்திய நலனுக்காகவே பாடுபடவேண்டும். அதிகாரத்தைக் கைப்பற்ற அனைவரும் ஓடினால் இந்தியா சீர்குலைந்துவிடும். தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்குப் பதிலாக தேசத்தின் நலனையே பிரதானமாகக் கருதவேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம். 11—1—48.

## மஹாசபை, சேவக் சங்கத்துக்கு உபதேசம்

தங்களுடைய நடவடிக்கைகளை கைவிடுமாறு ஹிந்துமஹாசபையையும் ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தையும் கேட்டுக் கொள்கிறேன். தவறான நடவடிக்கைகளின் மூலம் மதத்தின் பாதுகாப்பு சாத்தியமில்லை. தவறு செய்பவர்களை தண்டிக்கும் வேலையை அவர்கள் அரசாங்கத்தினிட்மே விட்டுவிட வேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம். 30—11—47.

## பெரும்பான்மை வகுப்பினருக்கு உபதேசம்

இரண்டு டொமினியன்களிலுமுள்ள பெரும்பான்மை வகுப்பினரும் தூற்றப்படுவதற்குரிய தங்கள் நடவடிக்கைகளுக்காக பச்சாதாபப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்தியாவும் பாகிஸ்தானும் எதிரிகளாக இல்லாமல் பரஸ்பர நண்பர்களாகவும் அண்டை நாடுகளாகவும் இருக்க முடியும்.

— பிரார்த்தனை கூட்டம். 6—12—47.

## சிறுபான்மை நடத்தும் முறை

சிறுபான்மையினரை விரட்டுவதும் அவர்களுடன் தவருக நடந்து கொள்வதும் அஹிம்சைக்குப் புறம்பாகும். சுதந்திரமென்ருல் மனம்போன போக்கில் நடந்து கொள்வதென்று அர்த்தமல்ல. ஒருவன் கொலைசெய்யவும், பொய் சொல்லவும் சுதந்திரம் வேண்டுமென்று பிரார்த்திக்கவோ அல்லது முயற்சிக்கவோ முடியுமா? அப்படிச் செய்வது கடவுளைவிட்டு ஷைத்தானுக்குப் பணிவதாகும்.

— பிரார்த்தனை கூட்டம். 27—12—47.

மற்றவர்களை குறைகூறுவதற்குப் பதிலாக தங்களை கட்டுப்படுத்திக் கொள்வது ஒன்றே துன்பமுற்ரேருக்கு சிறந்த வழியாகும். சேர்ந்து வாழவும் துன்பங்களை சகிக்கவும் தேவையான சக்தியை தங்களுக்குள் உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம். 14—12—47.

## தேசீய பாஷை

வட இந்தியாவிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் இருவரும் பேசக்கூடிய உர்தூ தேவநாகரிலிபிகளில் எழுதப்படும் பாஷையைத் தவிர வேறு எந்த பாஷையும் இந்தியாவின் தேசீய பாஷையாக இருக்க முடியாதென்று தென் ஆப்பிரிக்காவைவிட்டுத் திரும்பி வந்ததிலிருந்தே நான் சொல்லி வருகிறேன். துளஸிதாஸரின் பாஷை அதுதான். உர்தூ பாரசீக வார்த்தைகள் உபயோகிப்பதை அவர் எப்பொழுதும் மறுத்ததில்லை அந்த பாஷைதான் மாகாணங்களின் பொது பாஷை. இரண்டு லிபிகளிலும் எழுதப்படுகின்றது.

-- பிரார்த்தனை கூட்டம். 18—12—47.

## தேசீயபாஷையும் பாபூஜியும்

நான் இந்திய சாஹித்ய சம்மேளனத் தலைவனாக இருந்திருக்கிறேன். அன்று தேசீய பாஷைபற்றிய என் கருத்தை ஏற்றுக்கொண்டிருந்ததற்கும் இன்று மறுப்பதற்கும் காரணமென்ன? உர்தூவும் ஹிந்துஸ்தானி தேசீய பாஷையாக இருக்க வேண்டுமென்ற ஆசையின்காரணமாக இந்தியன் என்ற என் அந்தஸ்து எதாவது குறைந்து விட்டதா?

— பிரார்த்தனை கூட்டம். 18—12—47.

## மாகாண பாஷைகள்

மாகாணபாஷைகளுக்கு ஆதரவளித்து வளர்ச்சியடையும்படிச் செய்ய வேண்டும். அத்துடன் இங்கிலீஷின் ஸ்தானத்தில் தேசீய பாஷையைக் கொண்டு வரவேண்டும்.

## ஆங்கில பாஷை

எல்லா இந்திய பாஷைகளின் முன்னேற்றத்திற்கும் ஆங்கிலபாஷை ஒரு முட்டுக்கட்டையாகவே இருந்து வருகின்றது. ஆங்கில ஆட்சியுடன் ஆங்கில பாஷை முடிவடைவதும் அவசியம். அது ஒரு சர்வ தேசீய பாஷையின் அந்தஸ்தை அடைய முடியும்.

— பிரார்த்தனை கூட்டம். 18—12—47.

## தேசீய பாஷை

ஹிந்துஸ்தானியே இந்தியாவின் தேசீய பாஷை. இருப்பினும் அது பிரதேச பாஷைகளின் ஸ்தானத்தை வகிக்க முடியாது. அதன் மூலம் மாகாணங்களில் கல்வி புகட்டுவதும் கூடாது. இங்கிலையில் ஆங்கிலம் பற்றிய பிரச்னைக்கே அவசியமில்லை. ஆங்கிலத்தின் மூலம் கல்வி புகட்டுவதென்பது எவ்வகையிலும் சாத்தியமில்லை. ஹிந்துஸ்தானியால் இந்தியாவுடன் தங்களுக்குள்ள தொடர்பை அனைவரும் உணருவதே நோக்கம்.

— பிரார்த்தனை கூட்டம். 28—1—48.

## பாஷாவாரி மாகாணங்கள்

பிரதேச பாஷைகள் வளர்ச்சியடைய விரும்பினுல் பாஷை அடிப்படையில் மாகாணங்கள் பிரிக்கப் படவேண்டியது அவசியம். பாஷா வாரி மாகாணப் பிரிவினையால் கல்வியும் வியாபாரமும் முன்னேற முடியும்.

— பிரார்த்தனை கூட்டம் 25—1—48.

## மாகாணங்களின் எல்லை நிர்ணயம் :

மாகாணங்களின் எல்லைகளை புதிதாக நிர்ணயிப்பதற்கு எல்லைக் கமிஷன் அவசியமிருக்காதென்று நம்பு

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 6—9—'48 திங்கட்கிழமை | இதழ் 32


## நம்முடைய பிரிட்டிஷ் ஆபீஸர்கள்.

**பிரிவினைக்குப்** பிறகு இந்தியா பாகிஸ்தான் டொமினியன்கள் ராணுவ நிர்வாக திறமைகளை முன்னிட்டு சில பிரிட்டிஷ் ஆபீஸர்கள் ஊழியத்தை ஏற்றுக்கொண்டன. இந்தியாவை விட பாகிஸ்தானில் தான் பிரிட்டிஷார் அதிகமிருக்கின்றனர். பாகிஸ்தான் கவர்னர்களில் அவர்களே பெரும்பான்மை. இந்தியாவிலிருந்தவர்களிலும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றனர். பிரிவினைக்குப் பிறகு அவர்களுடைய போக்கு சரியில்லை யென்பதை மறுக்க முடியாது. பொதுவாக அவர்களுக்கு பாகிஸ்தானிடம் தான் அனுதாபம். இன்றைய நிலைமையில் அவர்கள் முக்கிய பதவிகள் வகிப்பதை எவ்விதத்திலும் வரவேற்பதற்கில்லை. இந்தியாவிடம் அவர்களுக்கு வெறுப்பு இருப்பது சகஜம். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடந்த கிளர்ச்சிகளுக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் காங்கிரஸே தலைமை வகித்திருக்கிறது ஆகையால் ஏகாதிபத்திய வாதிகள் இந்தியாவிடமும் காங்கிரஸ்மீதும் வெறுப்பு கொள்வது இயற்கை. இதற்கு மாறாக முஸ்லிம் லீக் எப்பொழுதும் சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்திருப்பதுடன் ஏகாதிபத்தியத்துடனே ஒத்துப் பாடியுமிருக்கிறது. அதனால் இயற்கையாக பிரிட்டிஷாருக்கு பாகிஸ்தானிடம் அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. பிரிவினைக்குப்பிறகு இந்தியாவில் பதவியிலிருக்க ஒரு சில பிரிட்டிஷார் மட்டுமே இசைந்தனர். ஏராளமானவர்கள் பாகிஸ்தான் சென்றுவிட்டனர். இன்று அவர்கள் பாகிஸ்தானில் பரம திருப்தியுடன் இருக்கின்றனர். பாகிஸ்தானிடம் அவர்களுக்குள்ள அனுதாபத்துக்கு இதைவிடவேறு என்னவேண்டும். அதுமட்டுமல்ல. பாகிஸ்தானுக்கு திருட்டுத்தனமாய் ஆயுதங்கள் அனுப்பிய குற்றச்சாட்டின் கீழ் அநேக பிரிட்டிஷ் அதிகாரிகளும் வெள்ளையர்களும் பிடிபட்டுமிருக்கின்றனர். இன்று ஹைதராபாதுக்கு ஆயுதமனுப்புவதிலும் அவர்களே பெரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். காஷ்மீர் போர்முனையில் இந்தியாவுக்கு எதிராக பிரிட்டிஷாரின் நடவடிக்கைகள் சர்வசாதாரணமாகிவிட்டன. அதனால் பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷாரை திருப்பி அழைக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காரை இந்தியசர்க்கார் கோரவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. இத்துறையில் எல்லைப்புரத்தின் மாஜி கவர்னர் ஸர் ஜார்ஜ் கிங்க் ஹாம் மாஜி இந்தியசேனாதிபதியான லோக் ஹார்டுக்கு எழுதிய கடிதம் குறிப்பிடத்தகுந்ததாகும். அதைப்பற்றி இந்திய சர்க்கார் தெளிவுபடுத்திவிட்ட பிறகு லோக் ஹார்ட் இந்தியாவுக்கு துரோகம் செய்தாரென்றோ அல்லது கடிதத்தை வெளியிடாமல் இந்தியாவுக்கு பாதகம் விளைவித்தாரென்றோ குற்றம் சாட்ட நாம் விரும்பவில்லை 1947-ல் ஸர் ஜார்ஜ் கிங்க் ஹாம் எழுதிய கடிதத்தில் காஷ்மீர் மீது படையெடுப்பு நடக்கப்போவதாக முன் கூட்டியே இந்திய சேனாதிபதிக்கு அறிவித்திருந்தார். பிரைவேட் கடிதம் ; எனவே அதை உபயோகிக்க முடியவில்லை ; என்று இந்திய சர்க்கார் சொல்லும் காரணம் சரியென்று ஒப்புக் கொண்டாலும் எல்லைப் புரத்தின் வெள்ளை கவர்னர் பாகிஸ்தானுக்கு துரோகம் செய்தாரென்றே ஏற்படுகின்றது. இரண்டு விதத்திலும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் போக்கை மன்னிப்பதற்கில்லை மேலும் இந்தியா பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷாரிடையே இருந்துவரும் ஒத்துழைப்பு இதனால் வெளிப்படுகின்றது. அவர்களுக்கு அவர்களுடைய ஆட்சியின் நலன்கள்தான் முக்கியமேயொழிய இந்தியா பாகிஸ்தான் நலன்கள் முக்கியமல்லவென்பதும் வெளியாகின்றது. இவ்வளவையும் கருத்தில் கொண்டு இன்று நம் தரைப்படைகளின் பிரதம சேனாதிபதியும், விமானப்படை ஏர்மார்ஷலும், கடற்படை கமாண்டரும் பிரிட்டிஷாராகவே இருக்கின்றனரென்பதை நினைக்கையில் நம்மையே நாம் நம்ப முடியவில்லை ஆயினும் இது உண்மை. கசப்பான உண்மையாகும். பாகிஸ்தான் சம்பந்தப்பட்டவரை சந்தேகத்துக்கே இடமின்றி பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகவே இருக்க தீர்மானித்து விட்டது. பிரிட்டிஷ் அதிகாரிகளும் அதற்கு உதவி செய்து திருப்தியடைகின்றனர். பாகிஸ்தானும் அவர்கள் ஆதரவின்கீழ் ஆறுதல் அடைகின்றது. ஆனால் இந்தியாவில் அவ்வித நிலைமையை சகிக்க முடியாது. ஒரு சில அல்லது பெரும்பான்மை பிரிட்டிஷ் அதிகாரிகள் உண்மையான விசுவாசத்துடனும் நேர்மையுடனும் இந்திய சர்க்காருக்கு சேவை செய்வதாகவும் இருக்கலாம். ஆயினும் இந்தியா பாகிஸ்தான் உறவின் இன்றைய நிலைமையில் குறிப்பாக ஹைதராபாத் பிரச்னை சிக்கலடைந்

[ 3-ம் பக்கத் தொடர்ச்சி. ]

கிறேன். அது ஒரு அந்நிய நாட்டுமுறை. அதை நாம் விட்டு விட்டோம். நம்முறைப்படி பரஸ்பரம் கலந்து பேசி எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். செய்யப்படும் முடிவு பிரதம மந்திரியின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட வேண்டும். இவ்விதம் உண்மையான சுதந்திரம் வெளிப்பட முடியும். எல்லைகளை நிர்ணயிப்பதற்கு மூன்றாவது கட்சியை எதிர்பார்ப்பது சுதந்திரத்திற்கு புறம்பாகும். நாம் அனைவரும் பரஸ்பர சுதந்திரத்துடனும் ஒத்துழைப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம் 25—1—48.

## சமஸ்தானங்களின் கொடுமை

இந்திய யூனியனில் சமஸ்தானங்கள் சேருவது என்பதற்கு பிரஜைகளை எவ்வளவு வேண்டுமானாலும் கொடுமையிலழுக்க சுதந்திரம் கிடைத்துவிட்டதென்று அர்த்தமல்ல.

— பிரார்த்தனை கூட்டம் 19—12—47.

## சமஸ்தானாதிபதிகளுக்கு எச்சரிக்கை

சமஸ்தானாதிபதிகள் தங்கள் அந்தஸ்தை காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாயின் தங்களை பிரஜைகளின் ஊழியர்களாகவும் தர்மகர்த்தாக்களாகவும் பாவிக்க வேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம் 19—12—48.

## ராணுவமும் போலீஸும்

ராணுவமும் போலீஸும் ஒருதலைப்பட்சமாக நடப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையானால் வருந்தத்தக்கதாகும். சட்டம் அமைதியின் பாதுகாப்பாளர்களே ஒருதலைப்பட்சமாக நடக்கும் குற்றம் புரிவார்களாயின் சட்டமும் அமைதியும் எப்படி நிலைபெறமுடியும்.

— பிரார்த்தனை கூட்டம் 18—12—47.

## விவசாயிகளும் வியாபாரிகளும்

தங்களிடமுள்ள தானியத்தை சர்க்கார் சிப்பந்திகளுக்கு தொந்திரவு கொடுக்காமல் இருக்க வியாபாரிகள் கள்ள மார்க்கட் செய்யாமல் இருப்பதும் தங்களிடமுள்ள தானிய இருப்பை விவசாயிகள் வெளியில் விடாமல் இருப்பதும் கடமை.

## ஜனபரிவர்த்தனை

ஜனப்பரிவர்த்தனை கொள்கையை நான் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது. லட்சக்கணக்கான ஆண்கள், பெண்களை அவர்களுடைய வீடுகளைவிட்டு வெளியேற்றுவது ஷைத்தானின் செய்கையைத்தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்.

—பிரார்த்தனை கூட்டம் 19—12—48.

## சரியான வழி

மற்றவர்கள் உயிர்வாழ சந்தர்ப்பமளிப்பதே இந்தியா, பாகிஸ்தான் இரண்டும் உயிர்வாழ்வதற்குள்ள சரியான வழியாகும்.

—பிரார்த்தனை கூட்டம் 10—12—47.

## விசுவாசம்

பாகிஸ்தான் சர்க்காரையும் முஸ்லிம்களையும் எதிர்க்கும் ஒருவன் பாகிஸ்தானுடன் தனக்குள்ள உறவை நீடித்துவைத்திருக்க முடியாது. அதைப்போலவே இந்தியாவை எதிர்ப்பவன் இந்தியப் பிரஜையாவதும் சாத்தியமில்லை. தன் அரசாங்கத்துக்கு எதிராக அணி அமைத்து எதிரிநாட்டுக்கு உதவிசெய்யும்

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

திருக்கையில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆபீஸர்களை முக்கிய பதவிகளில் வைத்திருப்பது சரியல்ல. இந்தியா பாகிஸ்தான் இரண்டிலும் பிரிட்டிஷ் ஆபீஸர்கள் இருப்பது எல்லையற்ற அபாயத்தை உண்டு பண்ணலாம். பாகிஸ்தான பிரிட்டிஷ் ஆபீஸர்களை ஒருக்காலும் விடப்போவதில்லை. அவர்களும் பாகிஸ்தானை விடமாட்டார்கள். ஆகையால் இந்தியா பாகிஸ்தான் பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஒத்துழைப்பைதகர்க்கவும் ராணுவம் முதலிய முக்கியமர்மங்கள் வெளிப்படாமலிருக்கவும் தன்னிடமுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளை உடனே நீக்கி அவர்களுக்கு பதிலாக நம்பிக்கையுள்ள இந்திய அதிகாரிகளை நியமிப்பதைத்தவிர இந்தியாவுக்கு வேறு வழியில்லை. நிபுணர்கள் பொறுத்தவரை சர்க்கார் அவர்களுடைய சேவைகளை பிரயோஜனப் படுத்திக்கொள்வதில் தவறில்லை. இன்னும் அதிக எண்ணிக்கையில் நிபுணர்களை தருவிக்கலாம். பிரிட்டன் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் நிபுணர்களை வரவழைக்கலாம். ஆனால் ராணுவம் முதலிய முக்கிய மர்மங்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் பத்திரமாய் இருக்குமென்று சொல்வதற்கில்லை. குறிப்பாக அவர்களிடம் பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஒப்படைப்பது புத்திசாலித்தனமாகாது. இந்தியா பாகிஸ்தான் நல்லுறவில் மற்றவர்களை விட நமக்கு அதிக அக்கறை உண்டு. இரண்டு டொமினியன்களுக்குமிடையே நல்லுறவு ஏற்பட்டு மனக்கசப்பு நீங்கவேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். ஆனால் இன்றைய நிலைமை நமக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. இந்திய சர்க்கார் முன்ஜாக்கிரதை நடவடிக்கையாக குறைந்தபட்சம் ராணுவத்திலுள்ள எல்லா பிரிட்டிஷ் அதிகாரிகளையும் வெளியேற்ற வேண்டியது அவசியமென்பதே நம் அபிப்பிராயம்.

ஒருவனை அரசாங்கம் துரோகியாகவே மதிக்கும். ஏனெனில் விசுவாசத்தை எப்பொழுதும் பிரிக்க முடியாது.

— பிரார்த்தனை கூட்டம் 15—12—47.

## வேற்றுமை

ஒத்துழைப்பின் எல்லை விரிவடையும்போது மாகாண வேற்றுமையாயினும் சரி வேறுஎவ்வித வேற்றுமையாயினும் சரி எல்லாவித வேற்றுமைகளையும் போக்கி விடுகின்றது. மனிதர்களிடம் அன்பு உண்டானபிறகு அவர்கள் யார்? எங்கிருப்பவர்கள்? எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் ? என்ற கேள்வியே எழுவதில்லை.

— பிரார்த்தனை கூட்டம் 27—12—47.

## இன்றைய காங்கிரஸ்காரர்கள்

சுதந்திரப் போராட்டத்தில் போராடியவர்கள் இன்று எல்லாவித ஒழுக்கக் கட்டுப்பாடுகளிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்டிருக்கின்றனர் சுதந்திரப்போராட்டத்தின் பகிரங்க எதிரிகளாயிருந்தவர்களுடைய சகாக்களாகவும் நண்பர்களாகவு மிருக்கின்றனர்.

(உண்ணாவிரதத்திற்குப்பிறகு அறிக்கை. 12—1—48)

## இன்றைய சர்க்கார்

காங்கிரஸின் கோஷ்டிப் பிரிவினை அநேக M L A. M L. C. க்களின் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கைகள் மந்திரிகளில் பலஹீனம் பொது மக்களிடையே பொதுவாக அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது. இன்று பொதுமக்கள் காங்கிரஸை திட்டவும் ஆரம்பித்திருக்கின்றனர்.

(உண்ணாவிரதத்திற்குப் பிறகு அறிக்கை 12—1—48.)

## தியாகம் செய்தது எதற்கு ?

இன்று நம்மிடையே இல்லாமலிருப்பவர்கள் தங்கள் வாழ்க்கையின் சகலசுகங்களை அர்ப்பணித்தும் துன்பங்களைசகித்ததும் வெள்ளையர்களுக்குப் பதிலாக கருப்பர்கள் சுரண்டுவதற்குத்தானா ?

— பிரார்த்தனை கூட்டம் 11—1—48.

## தற்கொலைக்குச் சமம்

மற்றவர்களை ஒடுக்கும் முயற்சி எப்பொழுதும் தற்கொலைக்கு சமமாகவே முடியும். இவ்வித மனப்பான்மைக்கு எதிராக நேர்மையுள்ள அனைவரும் பாடுபடவேண்டும்.

— பிரார்த்தனை கூட்டம் 11—1—48.

## குற்றம் சாட்டுதல்

தவறான வழியில் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ள எதற்காக முயற்சிக்க வேண்டும். நமக்கு அந்தரங்க சுத்தியிருந்தால் கடந்தகால மனக்கசப்புகளை மறந்துவிட வேண்டுமென்றே நான் சொல்லுகின்றேன். ஒருடொமினியன் இன்னொரு டொமினியனின் போக்கு சரியல்ல என்று குற்றம் சாட்டுகிறது இதைப்பார்த்து எனக்கு எல்லையற்றவேதனை ஏற்படுகிறது. இருதரப்பினரும் தங்களுடைய பொறுப்புகளை உணருவதால் மட்டுமே இந்த நிலைமை முடிவடைய முடியும்.

## உண்மையான ஆசை

ஹிந்துக்கள் முஸ்லிம்கள் சீக்கியர்களிடையே மனப்பூர்வமான நேசபாவத்தையே நான் விரும்புகிறேன். சிலதினங்களுக்குமுன் நேசபாவம் இருந்தது ஆனால் இன்று அதுகாணப்படவில்லை இன்றைய நிலைமையால் எந்த ஒருதேசபக்தனுக்கும் நிம்மதியில்லை.

— பிரார்த்தனை கூட்டம் 12—1—48.

## எனக்கு செல்வாக்கில்லை

முன்போல் இன்று என்குரல் சக்திவாய்ந்ததாயில்லை நான் ஏதாவது சொன்னால் அது பலனளித்த காலமும் ஒன்றிருந்தது என் குரலில் முன் மாதிரியே சக்தியும் செல்வாக்கும் இருந்திருந்தால் ஒரு முஸ்லிம் கூட பாகிஸ்தானுக்குப் போகவோ அல்லது பாகிஸ்தானிலிருந்து எந்தஒரு ஹிந்து சீக்கியனும் வீடுவாசலை விட்டு வெளியேறவோ அவசியம் ஏற்பட்டிருக்காது.

— குர்கானில் பேச்சு 11—12—47.

## என்னுடைய பேச்சு

நான் இல்லாமல் போன பிறகு என்னுடைய இந்த பேச்செல்லாம் நினைவுக்கு வரும்.

— பிரார்த்தனை கூட்டம் 18—12—47.


## ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.
அதை ஆதரிப்பது
உங்கள் தேசீயக் கடமை.

**மானேஜர், ஆஸாத், குடந்தை.**

# சுதந்திரம்.

(மௌலானா அபுல்கலாம் ஆஸாத்.)

நடப்பவர் எவரோ அவர்களுக்கே தடுக்கிடும்; அவர்களின் உள்ளங்கால்களில்தான் முட்களும் உறுத்தும். இந்த அடிப்படை உண்மையை மறக்கவேண்டாம். இன்று நாம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கையில் தவிர்க்க முடியாத நிலைமையில் நம்மை கஷ்டங்களும் எதிர்நோக்கும் ஒவ்வொரு அடியின் போதும் கால்கள் தடுக்கிடவும்செய்யும். அதனல் நாம் பயப்படக்கூடாது ஆண்மையுடன் சமாளிக்க வேண்டும்.

உலகத்தில் பிறப்பு என்பது மனிதனுக்கு மாத்திரமல்ல. பிறப்பு, இறப்பு என்னும் விதி எல்லாவற்றிற்கும் பொதுவானது. சமூகஙகளும் பிறக்கின்றன; சமூகங்களுடன் அவற்றின் சுதந்திரமும் பிறக்கின்றது.

1947 ஆகஸ்ட் மாதம் நிசழ்ந்ததொரு புதிய சம்பவம் உங்களனைவருக்கும் தெரியும் உலக படத்தில் ஏற்பட்டதொரு புதிய அம்சம்; சுதந்திரத்தின் அந்த அம்சத்தை கருத்தில் கொண்டே அதன் ஞாபகார்த்தத்தை இன்று நாம் கொண்டாடுகிறோம். ஆயினும் அந்த நாளை நாம் நினைக்கும்போது காணப்படவேண்டிய அளவுக்கு அதன் முகம் மலர்ந்ததாயில்லை. அதில் துன்பத்தின் அறி குறிகளும் தென்படுகின்றன.

நமக்கு சுதந்திரம்கிடைத்தது. துரதிர்ஷ்டவசமாக ஒரு பிரளயமும் கூடவே வந்தது அதனல் லட்சக்கணக்கான மக்கள் முடிவடைந்தனர். வேதனையளிக்கத்தக்க அச்சம்பவத்தால் நமக்கு ஏற்பட்ட வடுக்கள் சீக்கிரமே ஆறிவிடக் கூடியவையாக இல்லை. இன்றைக்கும் அதில் வேதனை இருந்து வருகிறது

பிரச்னை அத்துடன் தீர்ந்துவிட வில்லை. எங்கு நோக்கினும் கவலை; அடியெடுத்து வைக்குமிடமெல்லாம் தடைகளும், வழுக்குப் பாறைகளும்; ஆயினும் நடப்பவர் எவரோ அவர்களுக்கே தடுக்கிடும்; அவர்களின் உள்ளங்கால்களில்தான் முட்களும் உறுத்தும். இந்த அடிப்படை உண்மையை மறக்கவேண்டாம்.

பன்னிரண்டு மாதங்களுக்கு முன்தேசம் தன் விதிக்குத்தானே எஜமானனுக இருக்கவில்லை. தேசத்தின் விதி மற்றவர் கையில் இருந்தது. அன்று நாட்டில் அமைதியின்மை ஏற்படும் போதெல்லாம் நம்மை விட்டு நாம் அவர்களையே நொந்து கொண்டோம்.

ஆனல் இன்று நம் விதிக்கு நாமே எஜமானர்கள் நம்முடைய பொறுப்பை நாமே ஏற்று எழுந்து நிற்கையில் நம் வழியில் தவிர்க்க முடியாத வகையில் துன்பங்கள் குறுக்கிடுமென்பது வெளிப்படை. பொறுப்புச் சுமையை சுமந்து முன்னேறுகையில் கால்கள் தடுக்கிடுவதை சகித்தேயாக வேண்டும். அதனல் பயப்படக்கூடாது. ஆண்மையுடன் சமாளிக்க வேண்டும்.

நாட்டில் இன்று ஏற்பட்டு விட்ட நிலைமையை நான் உணராமலில்லை. கோடிக்கணக்கான நம் சகோதரர்களிடையே நிலவும் எண்ணங்களையும் நானறிவேன். ஆயினும் மனவேதனைகளை அகற்றுவது இந்தியர்கள் மீதும் அரசாங்கத்தின் மீதுமுள்ள கடமையாகும்......நாம் உறுதியை இழத்தலாகாது.

ஆறிப்போய் விட்ட ஒரு பிணத்துக்கு எவ்வித கவலையுமில்லை. ஆனல் எவர்களுடைய உடலில் ரத்தம் ஓடுகின்றதோ அவர்களுக்கு பலவித கஷ்டங்களும் இருக்கின்றன. சுதந்திரம் கிடைக்காமலிருந்த நேற்று வரை நிச்சயமாக ஒருவித நிம்மதி இருந்தது. தரித்திரம் பிடித்த நிம்மதியாகவே இருந்தது இந்திய ஆகாயத்தின் கீழ் திரும்பவும் அதுவராமல் ஆண்டவன் செய்வாராக. ஒரு சுதந்திரநாடு சுமையும் சுமக்க வேண்டியிருக்கும். மலரணைமீது மட்டுமின்றி முட்கள் மீதும் நடக்கவேண்டியிருக்கும். ஆகையால் நம்முடைய உள்ளங்களில் வேதனையிருப்பினும் இந்த நாளை சிரித்த முகத்துடன் கொண்டாடும்படி உங்களை கேட்டுக்கொள்ளுவேன்.

---

## கிழக்கு பஞ்சாபில் அகதிகளுக்கு வசதி.

சிம்லா ஆகஸ்ட் 17.

பிரதமர் ஸ்ரீ கோபிசந்த் பார்க்கவா பத்திரிகை நிருபர்களிடம் வெளியிட்ட அறிக்கை:-

ஜூலை 30 வரை மேற்கு பஞ்சாபிலிருந்து வந்த அகதிகளுக்கு 28,6[illegible],075 ஏகரா நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கிருந்து வெளியேறிய முஸ்லிம்கள் 32 82,079 ஏகரா நிலங்களை விட்டுச்சென்றனர். அதில் 4,15,000 நிலத்தை ஹிந்து சீக்கிய அகதிகளிடம் பெந்தகம் வைத்துச் சென்றிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் 75,000 ஏகரா நிலங்கள் அகதிகளுக்குவழங்கப்படும் இதுவரை அகதிகளில் 18,41000 பேருக்கு கிராமங்களிலும் 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நகரங்களிலும் குடியிருக்க வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அகதிகளுக்கு 10,81,700 ரூபாய் கடனுகவும் 10,31,907 ரூபாய் கால்நடைகள் வாங்குவதற்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் விட்டுச் சென்ற வீடுகளில் 80 சதவிகிதமும் கடைகளில் 67 சத விகிதமும் அகதிகளுக்குக் கொடுக்கப்பட்டன. முஸ்லிம்கள் விட்டுச் சென்ற 1990 பெரிய தொழிற் சாலைகளில் 770 தொழிற்சாலைகள் ஹிந்து சீக்கிய அகதிகளுக்கு கொடுக்கப்பட்டன. பெரிய நகரங்களில் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கும் அகதிகளின் விகிதாசாரம் 76 சதவிகிதமாகும். பலவந்தமாக முஸ்லிம்களின் வீடுகளை ஆக்ரமித்துக் கொண்டிருப்பவர்கள் நான்கு லட்சமிருக்கலாம் அகதி மாணவர்களுக்கு 64 லட்ச ரூபாய்கடனுகக் கொடுக்க சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

# பிரிவினைக்கு 3-வது யுத்த அபாயமே காரணம்

## யுத்தம் மூண்டால் இந்தியா ரஷ்யாவை எதிர்க்காது

—[ பண்டித சுந்தர்லால் பேச்சு ]—

லக்னோ 24-ஆக

நேற்று மாலை கங்கா பிரசாத் ஹாலில், ஐக்கிய முன்னேற்ற கமிட்டி சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. ஐக்கிய மாகாண விவசாய மந்திரி நிஸார் அஹமத்கான் ஷேர்வானி தலைமை வகித்தார். பண்டிட் சுந்தர்லால்ஜி பேசுகையில் கலவரகாலத்தில் அமைதியையும் சமாதானத்தையும் காத்து நிலைநாட்டிய லக்னோ வாசிகளை பாராட்டினர். மேலும் அவர் பேசியதாவது. இன்று நாடு சென்றுகொண்டிருக்கும் மிகவும் நெருக்கடியான கட்டத்தின் தன்மை தெரிந்தவர்களுக்குத் தான் தெரியும். என்னுடைய ஆசான் மஹாத்மா காந்திஜியின் உத்திரவுக் கிணங்க கடந்த செப்டம்பரில் நான் பாகிஸ்தான் சென்றேன். அங்கு நடந்த திடுக்கிடத்தக்க சம்பவங்களைப் பார்த்தேன். நான் ஹிந்து, முஸ்லிம் அகதி முகாம்களிலும் நாட்களைக் கழித்திருக்கிறேன்.

### கலவர சம்பவங்கள்.

அதில் ஒரு சம்பவம் மட்டும் சொல்ல விரும்புகிறேன் நம் மோட்டார் பியாஸ் நதியைத் தாண்டி ஒரு பெரிய மைதானத்தை அடைந்தது. அதில் மனிதர்களின் அங்கங்கள் தரையோடு தரையாய் சிதறிக் கிடந்தன விசாரித்தபோது செப்டம்பர் 29, 30 தேதிகளுக்கு மத்திய இரவில் கிழக்கு பஞ்சாபிலிருந்து வெளியேறிய 40,000 மக்களின் ஒருகூட்டம் பியாஸ் நதியைக் கடந்து அந்த மைதானத்தில் இரவைக் கழிக்கத் தங்கிற்று அந்த மைதானத்துக்கு அப்புறம் இன்னொரு சிறிய ஆறு இருப்பதும் தாங்கள் தங்கியிருக்கும் மைதானம் ஒரு பள்ளத்தாக்கு என்பதும் அவர்களுக்குத் தெரியாது. இரவில் இரண்டு நதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது மைதானத்தில் தங்கியிருந்த 14,000 மக்களும் வெள்ளத்தில் மூழ்கி மாண்டனர் என்று எனக்கு அறிவிக்கப்பட்டது

கிழக்கு பஞ்சாப் கொடுமைகளை விவரிக்கையில் அவர் சொன்னர் வால்டன் முஸ்லிம் அகதி முகாமில் துன்பமுற்ற பெண்களின் கதைகளைக்கேட்டுக்கொண்டிருந்தேன் ஒரு கிழவர் குறுக்கிட்டு "அன்பரே' துன்பங்களைப்பற்றி ஏன் கேட்கிறீர்கள் நம்முடைய குமாரத்திகள், பெண்கள் அனைவரும் வீடுகளிலிருந்து வெளியேறுவதற்கு முன்னலேயே செத்துப்போயிருந்தால் நலமாயிருந்திருக்கும்." என்று கூறியதை உயிருள்ளவரை என்னல் மறக்கமுடியாது.

### பரிவர்த்தனையின் பலன்.

நடந்தேறிய கொடுமைகளெல்லாம் ஜனப்பரிவர்த்தனையின் பலனேயாகும் உலக சரித்திரத்திலேயே இந்த பரிவர்த்தனையை விட பெரியதொரு கொடுமைநடந்ததில்லை. பூத்துக்காய்த்து நின்ற பெரிய விருக்ஷங்களை வேருடன் பிடுங்கி 500 மைல்களுக்கப்பால் கொண்டுபோய் நடுவதற்குத்தான் இதை ஒப்பிட்டுச் சொல்லவேண்டும். அந்த விருக்ஷங்கள் நடுவதற்குமுன் காய்ந்து, உலர்ந்துபோய்விடுமென்பது வெளிப்படை. வெளியேறிய முஸ்லிம்களிலும் திரும்பி வந்த ஹிந்துக்களிலும் நூற்றுக்கு ஒருவரை தவிர 99 பேர் இறந்தனர்; அல்லது நடைபிணங்களாகிவிட்டனர்.

ஆரம்பத்தில் ஹிந்து அகதிகளை உற்சாகமாக வரவேற்ற டில்லி முதலாளிகள் "இன்று அகதிகளைக் காட்டிலும் நம் முஸ்லிம்கள் எவ்வளவோ நல்லவர்கள்" என்று சொல்லுகின்றனர். பாகிஸ்தானிலும் "முஸ்லிம் அகதிகளைவிட ஹிந்துக்களே நல்லவர்கள்"! என்று அங்குள்ள முஸ்லிம்கள் சொல்லுகின்றனா.

இன்று நமக்குக்கிடைத்திருக்கும் சுதந்திரம் ஒரு சிறிய மண்பாண்டத்தைப்போன்றது. அதையும் நாம் பிரயோஜனப்படுத்திக் கொண்டாகவேண்டும். இது உண்மையான சுதந்திரமல்ல. சுதந்திரம் எப்படி கிடைத்தது? ஏன் கிடைத்தது? என்று அறிவதற்கு உலக அரசியலை தெரிந்துகொள்ள வேண்டியதவசியம்

இன்று உலகம் இரண்டு கோஷ்டிகளாக பிரிந்துவிட்டது. ஒன்று பிரிட்டன் அமெரிக்ககோஷ்டி; இன்னொன்று ரஷ்ய கோஷ்டி. சில நாடுகள் பிரிட்டன் அமெரிக்காவுடனும் சில நாடுகள் ரஷ்யாவுடனும் இருக்கின்றன. மூன்ருவது யுத்தம் நிச்சயமென்பதே என் அபிப்பிராயம். யுத்தம் நடக்கும். அதுவும் பயங்கரமாக நடக்கும்

### இந்தியா ரஷ்யாவுடன்

கடந்த இரண்டு யுத்தங்களுக்குப் பிறகு மூன்று விஷயங்கள் பிரிட்டனை எதிர் நோக்கின.

1. இரண்டு யுத்தங்களிலும் பிரிட்டனுடைய எதிரிகளிடமே இந்தியா அனுதாபம் கொண்டிருந்ததாக பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் நினைத்தது.

2. இந்திய ராணுவத்தினரிடையே ஏற்பட்டுவிட்ட ஒற்றுமையும் சுதந்திர உணர்ச்சியும்.

3. 1942 போராட்டமும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ராணுவ நடவடிக்கைகளும்.

இந்தியாவில் ஹிந்து முஸ்லிம்களிடையே ஒற்றுமையேற்பட்டு 1942-ம் வருஷ போராட்டத்தைப் போன்ற போராட்டம் மீண்டும் இந்தியாவில் ஆரம்பமானல் இந்தியா ரஷ்யாவுடன் சேர்ந்து கொள்ளும் என்று ஆங்கிலேயர்கள் பயந்தனர். மூன்ருவது உலக மஹாயுத்தத்தில் இந்தியாவின் உதவியை பெறுவதற்காக வெள்ளையர்கள் சுதந்திரத்தின் பெயரால் இந்தியாவை இரண்டு கூறுகளாகப் பிரித்து விட்டனர். இவ்விரு நாடுகளின் செல்வமும், ஜன சக்தியும்

# திருநெல்வேலி ஜில்லா ஐக்கிய முன்றேற்றக் கமிட்டி நடவடிக்கை ரிப்போர்ட்.

சென்னை மாகாண ஐக்கிய முன்னேற்றக்கமிட்டி கன்வீனர் ஜனாப் A. M. அல்லா பிச்சையால் ஜுலை மாதம் சென்னையில் கூட்டப்பட்ட கூட்டம் மூன்று மாத வேலைத்திட்டத்தை வகுத்து ஜில்லா கன்வீனர்களுக்கு அனுப்பிற்று. ஜனாப் A K. பிஜ்லி சாஹிப் திருநெல்வேலி ஜில்லா கன்வீனராக நியமிக்கப்பட்டார்.

திருநெல்வேலி ஜில்லா கன்வீனரின் அழைப்பை ஏற்று ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி லட்சியங்களில் அக்கரைகொண்ட அன்பர்கள் 8—8—48ல் ஜில்லாவின் பலபாகங்களிலிருந்தும் 70 லிருந்து 80 பேர்வரை கன்வீனர் இல்லத்தில் கூடினர். ஜனாப் P. N. M. முகம்மது ஷாகுல்ஹமீது தரகனார் தலைமை வகித்தார். கூட்டத்தின் நோக்கத்தை கன்வீனர் ஜனாப் A. K. பிஜ்லி சாஹிப் கீழ்வருமாறு விளக்கினார்.

வட இந்திய முஸ்லிமல்லாத சகோதரர்களைப் போல் நடந்துகொள்ளாத தென்னிந்திய ஹிந்து சகோதரர்களுக்கு முஸ்லிம்கள் என்றும் கடமைப்பட்டிருக்கின்றனர். துவேஷம், அவநம்பிக்கையால் ஏற்பட்ட பிரிவினை பஞ்சாப் முதல் வங்காளம்வரை சொல்லொணாக் கஷ்டங்களை தோற்றுவித்து கொலை, கொள்ளை, பொசுக்கலால் நாட்டின் சக்தியை விரயமாக்கியிருக்கிறது. தென்னிந்தியாவின் ஒருசில இடங்களில் வடஇந்திய வெறியின் அறிகுறிகள் லேசாக தோன்றிய போதிலும் பொதுவாக இங்கு அமைதியும் சௌஜன்யமுமே நிலவின. தென்னிந்தியாவின்உயரிய காலாச்சாரமும் வேரூன்றிய அன்பும் ஹிந்து முஸ்லிம்களிடையே நிலவும்சௌஜன்யமும்தான் அதற்குக் காரணம்.

மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியே இந்தியாவின் லட்சியம். மதம் தனி நபர்களின் சொந்த விஷயமாகவே இருக்கும் நாட்டின் பொது விஷயங்களில் குறுக்கிடாமலிருக்கும் வரை மதம் வளர்ச்சியடையவும் பிரகாசிக்கவும் அனுமதிக்கப்படும்.

முஸ்லிம்கள் தாய்நாட்டுப் பற்றுடன் நாட்டின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவுக்கும் எந்த சக்தியையும் முறியடிக்கவேண்டும்.

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

உணவுப்பொருள்களும் ரஷ்யாவுக்கு எதிராக உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்பதே அதற்கு அர்த்தம்.

பிரிட்டன் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே யுத்தம் மூண்டால் நாம் நடுநிலைமை வகிக்க முதலில் முயற்சிப்போம். அது சாத்தியமில்லாமல் போனால் இந்தியாவின் ஜனசக்தியும், செல்வமும், உணவுப் பொருள்களும் ரஷ்யாவுக்கு எதிராக உபயோகிக்கப்படாமலிருக்கவே முயற்சிப்போம். இந்தியா, பாகிஸ்தான் பொது மக்கள் சார்பில் நான் இதை சொல்லுகிறேன்.

இதே மாதிரியான அபிப்பிராயத்தை பலர் தெரிவித்தனர்.

இந்திய யூனியனுக்கு விசுவாசம் தெரிவித்தும் சர்க்காரிடம் நம்பிக்கை யிருப்பதாகவும் நாட்டுக்கு விடுதலை வாங்கிக்கொடுத்த காங்கிரஸை ஆதரிப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலப்பாளையம் மாஜி முஸ்லிம் லீக் தலைவர் T. S. M. O. முகம்மது உஸ்மான் தீர்மானத்தை பிரேரேபித்தார். லைசயத் அப்துல்லத்தீப் ஷாகாதரீ ஆதரித்தார். தீர்மானத்தைக்குறித்து அநேகர் பேசினர். ஜில்லா வெங்கிலுமுள்ள 80 பேர்களைக் கொண்ட ஜில்லா ஐக்கிய முன்னேற்றக்கமிட்டியும் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய நிர்வாகக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

(1) ஜனாப் A. K. பிஜ்லி (கன்வீனர் காரியதரிசி) (2) ஹாபீஸ் அஹமது மீரான், (3) ஷேக்பீர் முஹம்மது, (4) V. S. T முஹம்மது இபாராஹிம் (5) M.K. காதர் முஹையதீன் (6) P. N M. முகம்மது ஷாகுல் ஹமீது, (7) T. S. M O. முகம்மது உஸ்மான் (8) M. T. S. முகம்மது தம்பி, (9) மௌல்வி முகம்மது பாஸி, (10) P. ராமஸ்வாமி அய்யங்கார், (11) குமரகுருபர நாடார். தேனீருடன் கூட்டம் முடிந்தது.

ஆகஸ்ட் 15-ல் சுதந்திரதினம் மேலப்பாளையம் முஸ்லிம்களால் அதிவிபரிசையாய் கொண்டாடப்பட்டது. ஜனாப் P. N. M முகம்மது ஷாகுல்ஹமீது கொடியேற்றினார். ஜில்லா ஜட்ஜ் தலைமை வகித்தார். ஜில்லா கலெக்டர் ஜனாப் உலாம் முகம்மதும், போலீஸ் சூப்பிரெண்டெண்ட் பஷீர் அகம்மதும் பிரசன்னமாயிருந்தனர். P. N. M. முகம்மது ஷாகுல் ஹமீது பேசுகையில் மேலப்பாளையம் காங்கிரஸையே ஆதரிக்குமென்று உறுதி கூறினார். இனி இந்திய அரசியலில் முஸ்லிம் லீகுக்கு வேலையில்லை. எனவே அது கலைய வேண்டும். நடந்துவிட்டதை மறந்து அதை ஒரு பயங்கரக் கனவாகவே கருதவேண்டும் ஒவ்வொருவரும் காங்கிரஸில் சேர்ந்து பண்டித நேருவின் கைகளை பலப்படுத்தவேண்டும் அவரே நம்மை லட்சியத்துக்கு அழைத்துச்செல்ல முடியும் என்று A K. பிஜ்லி மௌல்வி முகமத் பாஸி, P. ராமஸ்வாமி அய்யங்கார் முதலியோர் பேசினர்கள்.

T. S. M O. முஹம்மது உஸ்மான் வந்தனோபசாரம் கூறுகையில் மேலப்பாளையம் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து அதன் லட்சியங்கள் வெற்றியடைவதற்கு லீகுக்காக உழைத்ததைவிட ஆயிரம்மடங்கு அதிகமாய் உழைப்பரென்று உறுதி கூறினர்.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனை செய்ய
**ஏஜெண்டுகள் தேவை.**

# பட்டாணியர் கிளர்ச்சியும்,

# — பாகிஸ்தானும் — ஆப்கானிஸ்தானும் —

கான்குலாம் ஹஸன்கான் பட்டாணியர்களில் 'ஸபீ' பிரிவைச் சேர்ந்தவர். 'பஷ்து' பண்டிதர் காபூலில் பிரபல ஜவுளி வியாபாரி இந்தியாவிடம் ஜவுளி வாங்க காபூலிலிருந்து வந்த கமிஷனின் தலைவராய் சமீபத்தில் பம்பாய் வந்திருக்கிருர். அவருடைய கீழ்வரும் கட்டுரை பட்டாணியர் போராட்டத்தை தெளிவாக சித்தரித்துக்காட்டுகின்றது.

—ஆசிரியர்.

இந்தியாவிடமிருந்து ஜவுளி வாங்க பம்பாய் வர வேண்டியிருந்தது. காபூலில் இந்திய ஸ்தானீகர் காரியாலயத்துக்கு; விண்ணப்பித்தேன். உடனே பாஸ்போர்ட் கிடைத்தது. பாகிஸ்தான் வழியாகப் பிரயர்ணம் செய்ய அனுமதி கோரி பாஸ்போர்ட்டை பாகிஸ்தான் காரியாலயத்திற்கு அனுப்பினேன். பாகிஸ்தான் ஸ்தானீகர் அனுமதி தர மறுத்துவிட்டார்.

பாக்ஸ்தானீகரின் நடத்தை சர்வதேச விதிகளுக்குப் புரம்பாக விருந்தமையால் காபூல் வெளிநாட்டிலாகா உதவியால் பெரு முயற்சிக்குப் பிறகு ஏழு நாட்கள் கழித்து 'புதிய இஸ்லாமிய ஆட்சி' வழியாகப் பிரயாணம் செய்வதற்கு அனுமதி கிடைத்தது.

இப்பிரதேசத்தில் எனக்கு இது முதல் பிரயாணமல்ல. வியாபார விஷயமாகவும் உல்லாசப்பிரயாணமாகவும்பிரிவினைக்கு முன் அநேகம் முறை இங்கு நான் வந்ததுண்டு. குறிப்பாக எல்லைப்புரத்தை சொந்தவீடாகவே பாவிக்கிறேன். அங்குள்ள எதுவும் எனக்குப் புதிதல்ல அங்குள்ளவர்கள் என் தேசத்தவர்களுக்கு மாறுபட்டவர்களல்ல. நம்முடைய நாகரீகம், பாஷை, மதம், எல்லாமே ஒன்று. ஏகாதிபத்திய நலனுக்காக வெள்ளையர்கள் நம்மிடையே செயற்கை சுவர் ஒன்றை எழுப்பியிருந்தனர். ஆயினும் என்றுமே நாம் ஒருவரையொருவர் அன்னியர்களாக பாவித்ததில்லை எல்லையின் இரண்டு தரப்பிலுமுள்ளவர்களிடையே பெண்கள் கொடுப்பதும் வாங்குவதும் இருந்தே வருகிறது படத்தில் காணப்படும் ஏகாதிபத்திய எல்லைகோட்டை பட்டாணியர்கள் ஒருபோதும் ஒப்புகொண்டதே கிடையாது. பாஸ்போர்ட் முறை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை வெள்ளையன் உணராமல் போனதற்கு இதுதான் காரணம்.

ஆங்கிலேயர் காலத்தில் நான் பலதடவை எல்லைப்புரத்துக்குச் சென்றேன். சுதந்திரமாக நடமாடினேன். ஒருவனும் என் நடமாட்டத்தை ஆட்சேபித்ததில்லை ஆனல் பிரிட்டிஷ் ராஜதந்திரத்தையே தங்கள் மதமாகக் கொண்டவர்களின் பிற்போக்கு, துவேஷம், குறுகிய மனப்பான்மையின் விளைவாக அமைந்திருக்கும் 'இஸ்லாமிய ஆட்சி' இன்று பல விதத்திலும் தொந்திரவு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பிளவு உண்டு பண்ணும் எந்த முயற்சியையும் முறியடித்த பட்டாணிய வாலிபர்களின் உள்ளங்களில் சுதந்திர உணர்ச்சி குமுறிக்கொண்டிருக்கிறது, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வெற்றிகரமாகப் போராடிடவர்கள் இனி விடுதலை பெற்று சுதந்திர ஜனநாயக 'பட்டாணிஸ்தான்? அமையும்வரை போராடப் போகின்றனர்.

என்னுடைய ஏழுநாள் பிரயாண அனுமதி பிஷாவரிலிருந்து ஆரம்பமாயிற்று. ஒவ்வொரு இடத்திலும் ஏஜெண்டுகளின் தொல்லை என்னை திணற வைத்தது பட்டாணியர்கள் பழைய ஆட்சியில் பெற்றிருந்த ஓரளவு சுதந்திரத்தையும் பாகிஸ்தானில் மெள்ள மெள்ள பறிக்கப்படுவதைப்போன்றதொரு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

எல்லைப்புர மாகாணத்துக்குப் புறப்பட்டபோது என் மனம் உற்சாக மிழந்திருந்தது. என் சகோதரர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் குறித்து அனுதாபமும் தளர்ச்சியும் ஏற்பட்டன. ஆயினும் அவர்கள் தியாகத்தாலும், போராட்டத்தாலும் லட்சியத்தை அடைந்தே தீருவார் என்ற திட நம்பிக்கை எனக்கு உண்டு.

## எல்லை. காந்தி என்பது ஒரு சக்தி.

நாட்டின் இதர மாகாணங்களை விட அதிகமாய் எல்லைமாகாண பட்டாணியர்கள் சுதந்திரத்துக்காக தியாகம் செய்திருக்கின்றனர். எல்லைப்புர காந்தியென்பது ஒருபெயர் மட்டுமல்ல. அது ஒரு சக்தி. பெரிய சக்திகளைவிட மீறிய சக்தி. ஏனெனில் அவர் சத்தியம், சமத்துவம், சகோதரத்துவக் கொடியைத் தாங்கி நிற்கிருர். சுதந்திரத்தை நாடும் ஆயிரக்கணக்கான பட்டாணியர்களைப் போலவே அவரும் வாடுகிருர். அவர்கள் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. சுதந்திரம் மற்றவர்களுக்குத்தான் கிடைத்ததே யொழிய பட்டாணியர்களுக்கு அல்ல. எனவே அவர்கள் போராட்டத்தை எப்படிக் கைவிட முடியும்? அவர்கள் போராடுவர். எதுவரை தங்களுக்கு சுதந்திரம் கிடைப்பதில்லையோ அதுவரை அவர்களுடைய போராட்டம் முடிவடைய

முடியாது. அவர்கள் அறிவாளிகள்: பேசாமலிருந்தால் பாகிஸ்தானிகளின் வெறியின் காரணமாக தாங்கள் அழிய நேரிடுமென்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்றனர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைவிட பாகிஸ்தான் அபாயகரமானது பட்டாணியர்களைக் கூறு போடவே பாகிஸ்தான் விரும்புகிறது.

## கைதுகள் படலம்.

ஒவ்வொரு நாளும் மக்கள் விசாரணையின்றி சிறைக்குள் தள்ளப்படுகின்றனர். எழுத்துரிமையும் விசாரணை உரிமையும் ஈவிரக்கமின்றி நசுக்கப்படுகிறது. அக்கிரமம், அநியாயம் யதேச்சாதிகாரம் தலைவிரித்தாடுகின்றது. பட்டாணியர்களின் ஒற்றுமையை குலைக்க சூழ்ச்சி, லஞ்சம், பலாத்காரம் கையாளப்படுகிறது பாகிஸ்தான் சர்க்காரின் ஏகபோக உரிமையாளர்களான ஒரு சிலரின் வெற்றிக்காக மதத்தின் பெயர் உபயோகிக்கப்படுகின்றது. கராச்சி யதேச்சாதிகாரிகளின் கனவு பூர்த்தியடைவதற்கு வெறியர்கள் கல்வியறிவற்றவர்கள் பட்டினி கிடந்து வாடுபவர்கள் காஷ்மீர் பீரங்கிகளுக்கு இரையாக்கப்படுகின்றனர் ஊரி, நௌஷோரா, சவக்குழிகள் நிரப்பப்படுகின்றன. அசுத்தமான எண்ணங்கள அசங்கியமான சூழ்ச்சிகளால் பயங்கரமான விளைவுகள் ஏற்படுகின்றன. இன்று பட்டாணியர்களுக்கு கெட்டகாலம் என்பது நிச்சயம். அவர்களுடைய தலைவர்கள் சிறைக்கூடங்களில் அடைப்பட்டுக் கிடக்கின்றனர் 'ஹிந்து அபாயம்' என்ற பூச்சாண்டி பட்டாணிய வாலிபர்களை மரணகண்டத்துக்குள்ளாக்கியிருக்கிறது. பட்டாணியர்களிடையே பிளவு உண்டுபண்ணும் வேலையை ஆங்கிலேயர்கள் ஆரம்பித்தனர். பாகிஸ்தான் அதை பூர்த்தி செய்யவே விரும்புகின்றது.

## பட்டாணியர்கள் போராடுவர்


'இஸ்லாமிய ஆட்சி' யின் சூழ்ச்சிகள் பட்டாணியர்களை விழிப்புறச் செய்து விட்டன. எதிர்நோக்கியுள்ள அபாயத்தை அவர்கள் உணர்ந்துவிட்டனர். அவசியம் ஏற்பட்டால் ஆயுதங்களைத் தாங்கியும் பட்டாணியர் போராடுவர். பாகிஸ்தானின் குறுகிய மனப்பான்மை அவர்களை போருக்குத் தூண்டியிருக்கிறது. ஏற்கனவே வஜீரிஸ்தான் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. கான் அப்துல் கையூம்கான் பட்டாணியனல்ல எனவே பட்டாணிய சுதந்திர உணர்ச்சியை நசுக்க முயற்சிப்பவர்களின் தலைவனாய் விளங்குகிறான்.

இந்தியாவுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்கள் அடிமைகளுக்கு அடிமைகளாக இருப்பதும் இஸ்லாமின் பெயரால் இஸ்லாமுடன் ஸ்நானப் பிராப்தியும் இல்லாதவர்கள் அவர்களை அடிமைப் படுத்தி வைப்பதும் இயற்கைக்கும் நியாயத்துக்கும் புறம்பான காரியமாகும். விலைக்கு வாங்கும் பண்டமல்ல விடுதலை போராட்டம் நடக்கின்றது. மதத்தின் பெயரால் அடிமைப்படுத்தும் அடிமைத்தளைகள் அறுந்துவிழும் வரையில் போராட்டம் நடந்தேதீரும். எல்லா சூழ்ச்சிகளையும் பட்டாணியர்கள் தெரிந்து கொண்டு விட்டனர். "சூழ்ச்சிக்காரர்களின் தலைவன் எட்ட இருக்கின்றான். அவன் பட்டாணியர்களை பல கூறுகளாகப் பிரித்து வைத்திருந்தான். இன்று எல்லா பட்டாணியர்களையும் அழித்து பட்டாணிய சமூகத்தையே ஒழிக்க விரும்புகிறான். பட்டாணியர்களை அடிமைப்படுத்த நடக்கும் முயற்சிகள் பட்டாணிய சுதந்திரத்துக்காக திறக்கப்படும் ஒரு கதவேயாகும். இன்றைய அழிவு அதிக நாள் நீடித்திருக்க முடியாது" என்பது பட்டாணியர்களுக்குத் தெரியும்.

பட்டாணிய சுதந்திரத்தை நசுக்க நடக்கும் முயற்சிகள் இயற்கையாக ஆப்கனிஸ்தானில் எதிரொலிக்கத்தான் செய்யும். நம் தலைவர்கள் நடத்தும் பேச்சுவார்த்தைகளை நாம் நம்பியிருக்கிறோம். ஆப்கன் சர்க்கார் அமைதியை விரும்புகிறது. யுத்தத்துக்குப் பதிலாக பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்னையை தீர்க்கவே விரும்புகிறது. இல்லையேல் இரண்டு லட்சம் ஆயுதபாணிகள் போரிட்டு தங்கள் பிரச்னையை சுலபமாக தீர்த்துக்கொள்ள முடியும். பட்டாணியர்களை ஜயிக்க முடியாது. இந்த உண்மையை ஆங்கிலேயர்களைக் கேட்டு பாகிஸ்தான் தெரிந்து கொள்ள வேண்டியதவசியம்.

பல சிறந்த

அலாரம் டைம்பீஸ்கள்



4½" டயல்

கைபிடியுடன்
அழகிய
கலர் கேஸ்

மிகவும்
உறுதியாக
தயாரிக்கப்
பட்டவை.

ரூபா 30/-

ஜலால் & ஸன்ஸ்,
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்
மவுண்டு ரோடு, சென்னை
அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.

# வளரும் ஜனநாயகம் - 6.

—: தராசு :—

வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களும், சட்டசபையும்தான்; ஜனநாயக அரசை நடத்தவேண்டும் என்று தர்க்கரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன்படி சட்டசபையானது பெரிய பொறுப்புள்ள ஸ்தாபனமாகவும், அதன் அங்கத்தினர்கள் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்று அறிய முடிகிறது. சட்டசபை அங்கத்தினர்களுடைய உரிமை, கடமை, முதலியவற்றைப்பற்றி யுக்தி பூர்வமாகவோ, அல்லது அனுபவ ரீதியாகவோ வாதிப்பது தவறுகவே முடியும். வாக்காளர்களின் பிரதிநிதி என்ற முறையில், இவர்கள் தங்கள் கடமையைச் செலுத்தவேண்டும் என்ற கொள்கையை ஜனநாயக ரீதியில் ஒப்புக்கொள்ள இயலாது ஆனல் எந்தத் தொகுதியிலிருந்து பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அத்தொகுதியின் நன்மை தீமைகளைப் பொருட்படுத்தாமல், தம்முடைய சொந்த அபிப்பிராயப்படி சபையில் வாக்களிக்க உரிமையிருப்பதாக நினைப்பதற்கும், ஜனநாயகத்தில் இடமில்லை; இவ்விரண்டு முறையையும், காலத்திற்கும் சமயத்திற்கும் தகுந்தாற்போல் உபயோகிப்பது விவேகமான அங்கத்தினரின் கடமையாகும். அங்கத்தினர்களுக்கு மக்கள் உத்திரவிடுவதோ அல்லது கட்டாயப் படுத்துவதோ, அவருடைய உரிமையைப் பறிப்பதாகும். அதே சமயத்தில் அங்கத்தினர்களின் சொந்த முடிவுக்கு எதையும் விடுவது, பிரதிநிதித்வ முறைக்கு களங்கத்தை உண்டுபண்ணும் என்பதையும் அங்கத்தினர்கள் சிந்திக்கவேண்டும்.

சட்டமியற்ற இரண்டு சபைகள் வேண்டுமா? அல்லது ஒரு சபை போதுமா? என்ற விஷயத்தை அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டும். ஜனநாயக ரீதியாய் பார்க்கும்போது இரண்டு சபைகள் தேவையில்லை என்று திட்டமாகச் சொல்லலாம். பார்லிமெண்டரி முறையில் சிறந்து விளங்கும் இங்கிலாந்தில் இரண்டாவது சபையிருந்து வருவதற்கு சரித்திர பூர்வமான ஆதாரத்தையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆராய்ச்சி மனப்பான்மையில் ஆழ்ந்து யோசிக்கும்போது இரண்டாவது சபையினல் சில நன்மைகள் இருக்கின்றன. பார்லிமெண்டரி சட்டம் இங்கிலாந்தில் அமுலுக்கு வந்த பிறகு இரண்டாவது சபை ஒரு பொழுது போக்காகவே தோன்றுகிறது. ஜனநாயகத்தில் சரியான நம்பிக்கையில்லாததும், சிறுபான்மையோரை திருப்தி செய்ய வேண்டும் என்ற நோக்கமும்தான் பிறநாடுகளில் இரண்டாவது சபையிருப்பதற்குக் காரணமாகிறது. சட்டசபைக்காக சில கட்டுப்பாடுகளுடன் கூடிய ஒரு முறையை. ஒரு காலத்தில் அறிஞர்கள் தயாரித்தபொழுது தங்களுடைய திறமை முழுவதையும் காண்பித்து கண்டுபிடித்ததுதான் இரண்டாவது சட்டசபை. பொதுமக்களின் கருத்தும் நன்மை, தீமையும், இரண்டு சபைகளின் மூலம் வெளிப்படவேண்டும் என்ற முறையை ஒத்துக்கொள்ள முடியவில்லை. முதல் சபையில் இடம் பெறாத கட்சியாளர்களின் ஆசைகள் நிறைவேறுவதற்கும் கட்சிக்குள்ளேற்படும் தலைமைப் போட்டிகளைத் தவிர்க்கவும், கட்சியின் பலத்தை அதிகப்படுத்தவும் இரண்டாவது சபை மிகுந்த பயனுள்ளதாக இருந்துவருகிறது இரண்டாவது சபை முதல் சபையுடன் ஒத்துழைக்குமானல் இரண்டு சபைகள் தேவை என்று ஒப்புக்கொள்ளமுடியாது; ஒத்துழைக்காவிட்டால், வலுவில்லாத ஒரு போட்டி ஸ்தாபனமாகத்தான் இரண்டாவது சபை விளங்க வேண்டும்.

பரம்பரையாக அங்கத்தினர்களாகவரும் வழக்கத்தைக் கைவிட்ட, ஒரு இரண்டாவது சபையினல் கட்சி முறையின்படி அரசு நடத்துவதற்கு, பெரிய ஆதரவைத் தரக்கூடும்; ஆனல் பலமான அரசாங்கத்திற்கெதிராகவும் இந்த சபை வேலை செய்யவும் முடியாது. பலமுள்ள அரசாங்கத்துக்கு இதனுடைய ஆதரவும் தேவையில்லை. பொதுமக்களின் கருத்தை சரியாக வெளியிடவும், முதல் சபையைப் போலில்லாததுமான ஒரு இரண்டாவது சபையை அமைப்பது எந்த அரசிலும் கஷ்டமாகத்தானிருக்கும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அரசியல் சட்டப்படி "முதல் சபையானது ஒரு விவகாரத்தில் மிதமில்லாமலிருக்குமேயானல், அதை மிதப்படுத்தவே இரண்டாவது ஏற்பட்டிருக்கிறது." என்ற முறையானது நடைமுறையில் ஒத்துவரவில்லை என்பதை கவனிக்க வேண்டும். எவ்வளவு தாராள மனப்பான்மையுடன் பார்த்தாலும் வளரும் ஜனநாயகத்துக்கு இரண்டாவது சபை அவசியம் என்று தோன்றவில்லை.

சட்டசபையைத் தவிர பொதுமக்களே சில வியவகாரங்களில் நேரடியாக வாக்களிப்பது மிகவும் அவசியமானது. அரசியல் சட்ட திருத்தங்கள், பெரிய கொள்கைகள் அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயங்களின்மீது பொதுமக்களின் அபிப்பிராயத்தை அதிகாரபூர்வமாக தெரிந்துகொள்வதற்கு ஸர்வஜன வாக்கு (Referendum), பொதுஜன வாக்கு

(Initiative) என்ற இரண்டு வழிகளை ஜனநாயகத்தில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. சட்டசபையில் நிறை வேற்றப்படும் சாதாரண அல்லது விசேஷ சட்டத்தை யும், அரசியல் சட்டத் திருத்தங்களையும் பற்றி, சட்டத் தில் கூறப்பட்டிருக்கும் முறைப்படி, பொதுமக்களின் வாக்குரிமையைத் தெரிந்துகொள்வதுதான் 'ஸர்வ ஜனவாக்கு' என்று கூறப்படுகிறது. சட்டப்படி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாக்காளர்கள் ஒரு அரசியல் சட்டத்தையோ, அல்லது திருத் தத்தையோ பற்றி மக்கள் எல்லோருடைய அபிப்பி ராயத்தையுமறிய வோட்டுக்கு விடும்படி கோருவது தான் 'பொதுஜன வாக்கு' எனப்படுகிறது. நேரடியான முறையில் சட்ட நிருபணம் செய்வதற் குள்ள அதிகாரத்தை பல தேசத்தவர்கள் போற்றி யிருந்தபோதிலும், நம் நாட்டில் தற்சமயம் இம் முறையை கைக்கொள்ளமுடியாது.

ஸர்வஜன வாக்கு, பொதுஜன வாக்குப் போன்றவைகள் சட்டசபையின் மதிப்பைக் குறைத்து விடுவதாக சிலர் வாதாடுகிறார்கள். பொதுவாகப் பார்க்கும்போது இதில் மதிப்புக்குறைவிற்கு இட மிருப்பதாக, ஜனநாயகத்துவப்படி சொல்லமுடியாது; இவைகள் அமலிலிருக்கும் தேசங்களில் இத்தகைய மதிப்புக்குறைவு ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. சட்டசபையில் நிறைவேறிய ஒரு சட்டம், தீமையை விளைவிக்கக்கூடும் என்று கருதும்பட்சத்தில், அதை மறுக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ, மக்களும் ஒரு வழியிருக்கவேண்டும் அந்த சந்தர்ப்பத்தில் ஸர்வஜனவாக்கு போன்றவைகளின் மூலம் இந்த வழியை அடைய முடிகிறது. மேலும் ஒரு நல்ல சட்டத்தை சட்டசபையில் கொண்டுவராமல் தடுக்க சில கோஷ்டிகள் முயற்சித்தாலும் ஸர்வஜனவாக்கு பொதுஜனவாக்கு முதலியவைகளின் மூலம் நன்மை யைச் செய்ய முடியும். கட்சி முறையிலேற்படும் ஊழல்களை அகற்றுவதற்கும், கட்சியுணர்ச்சியின் விபரீதங்களைப்போக்கி, தேசீய மனோபாவத்தை வளர்க்க இவைகள் சாதகமாக இருக்கும். மேலும் வளரும் ஜனநாயகத்துக்கு ஒரு இன்றியமையாத முறையுமாகும். பல தேசத்து அறிஞர்களும் பத் திரிகைகளும் இம்முறையை பலமாக ஆதரித்திருப்ப தாகத் தெரிகிறது. இங்கிலாந்தில் ஸர்வஜனவாக்கு போன்றவைகளுக்கு ஆதரவு கிடையாது. ஸர்வஜன வாக்கு போன்றவைகளினால் அரசியல் முறை பல வீனப்பட்டுவிடலாம் என்று இங்கிலாந்தில் கருதப் படுகிறது. பொதுத் தேர்தலை இவைகளுக்கு ஒப் பிட்டுக் கூறமுடியாது பொதுத் தேர்தலில் எந்த குறிப்பிட்ட விஷயத்தின் மீதும் வாக்கெடுப்பு நடை பெறுவதில்லை. மேலும் ஒரு குறிப்பிட்ட கொள்கை மீது பொதுத்தேர்தலின் முடிவைக்கொண்டு தீர்மானம் செய்யமுடியாது. நமது தேசத்தைப் பொறுத்த வரையில், ஸர்வஜனவாக்கு, பொதுஜனவாக்கு முதலி யவைகள் இன்றியமையாதது என்றே சொல்ல வேண்டும். ஒரு லட்சம் வாக்காளர்கள் அபிப்பி ராயப்பட்டால் எந்த விஷயத்தின் மீதும் பொதுஜன வாக்கு பதிவு செய்யப்பட வேண்டும். மக்களின் உரிமையை உபயோகப்படுத்தவும், நிர்வாகத்தின் விஷ யங்களை தெரிந்துகொள்வதற்கும் இம்முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கமுடியும்.

கட்சி முறை அரசானது ஜனநாயக முறையின் பிரிவு என்று கூறமுடியாதாகையால், கட்சி முறையில் அரசு நடக்குமிடங்களில் பொதுஜன வாக்கெடுப்பு போன்றவைகளை விரும்பமாட்டார்கள். பொதுவாக பார்லிமெண்டரி முறையில் ஆட்சி நடக்குமிடங் களெல்லாவற்றிலுமே இவைகளை விரும்புவது கடினம் தான். வளரும் ஜனநாயகத்துக்கு கட்சி முறையைக் கைவிடுவதுதான் நன்மையைத் தருவதாகும். அரசியல் கட்சிகள் விருத்தியடைவது ஜனநாயக வளர்ச்சியைக் குறைத்துவிடும். ஆகையால்தான் அரசியல் கட்சி களைத் தடை செய்யவேண்டும் என்று ஜனநாயக லட்சியத்தில் கூறப்படுகிறது. கட்சி முறை அரசு ஒருவிதமான சர்வாதிகார அரசாகவே யிருக்கிறது. பிரதிநிதித்வத்தின் மூலமாகத் தோன்றிய கட்சியரசில் கட்சியிலுள்ளவர்கள்கூட அடக்கப் படுகிறார்கள். அங்கத்தினர்கள் தங்கள் மனச்சாட்சியின்படி எதை யும் செய்ய முடிவதில்லை. அரசாங்கத்தை நடத்தும் கட்சிக்கெதிர்க்கட்சியின் மனோபாவங்களை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. கட்சி முறை ஜனநாயக முறையாகாது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். கட்சி முறையின் தீமைகளைப் பற்றி சிந்திக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் இன்னுமேற்படவில்லை. அப்பொழுது மக்கள் சரி யானபடி ஜனநாயகத்தைப் பற்றி சிந்திப்பார்கள். ஜனநாயகமும் வளரும் என்பதில் சந்தேகமில்லை.


## வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

**மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.**

# உலக அரங்கம்.

காஷ்மீரில் இந்தியத் துருப்புக்கள் தற்காப்புப் போரில் ஈடுபட்டிருக்கின்றன. சமீபத்திலிருக்கும் விமான தளங்களை பிரயோஜனப் படுத்திக்கொண்டு எல்லா போர்முனைகளுக்கும் தளவாடங்கள் ராணுவ உதவி அனுப்ப பாகிஸ்தான் ஆரம்பித்திருக்கிறது. பாகிஸ்தானின் பெரிய ராணுவதளமான ராவல்பிண்டி காஷ்மீர் எல்லைக்கு சமீபமாக இருக்கின்றது. அத்துடன் சயால்கோட்,ஜீலம் போன்ற இரண்டு பெரிய தளங்களுமிருக்கின்றன. அங்கிருந்து சுலபமாக தளவாடங்கள் அனுப்ப முடியும். இருப்பினும் இருதரப்பிலிருந்தும் வெளியாகும் யுத்த அறிக்கைகளைப்பார்த்தால் பாகிஸ்தான் துருப்புக்கள் பெரிய அளவில் தாக்குதல் ஆரம்பிக்கவில்லையென்றே தெரிகிறது. நாசகரமான ஆயுதங்கள் சூரையாடும் படைகளை உபயோகித்து இந்தியத் துருப்புக்களுக்கு தொந்திரவு செய்யவே விரும்புகின்றனர். இது பெரிய ஒரு தாக்குதலின் ஆரம்பமாகவும் இருக்கலாம். பாகிஸ்தான் ராணுவ பலம் எவ்வளவுதான் அதிகமாக இருப்பினும் அவர்களால் ஒரே முனையில்தான் பெருமளவில் தாக்கமுடியும். அங்கிலேயில் இந்தியத்துருப்புக்கள் இதர முனைகளிலும் பதிலுக்குத் தாக்கமுடியும். எதிரிகள் பெரிய குண்டுகளைச் சுடுகின்றனர். விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் உபயோகிக்கின்றனர். இருந்தும் கடந்த ஒரு மாதத்தில் நடந்தபோரில் அவர்களுக்கு எவ்வித வெற்றியும் கிடைக்கவில்லை ஏற்கனவே வளைக்கப்பட்டிருந்த ஒரு கோட்டையைத் தவிர வேறு எந்த இடத்தையும் எதிரிகள் ஆக்ரமிக்க முடியவில்லை.

## ஹைதராபாத் தாக்குமா?

இன்று பொதுமக்களின் கல்பனசக்தியை கவர்ந்திருக்கும் கேள்வி இதுதான். ஹைதராபாத் ராணுவ பலத்தைப் பார்க்கையில் தாக்குவது சாத்தியமில்லை. ஒருக்கால் ஹைதராபாத் படைகள் கிராமங்களைத் தாக்கி கிராமவாசிகளை இந்தியாவுக்குள் விரட்டி அகதிகள் பிரச்னையை ஏற்படுத்த முயற்சிக்கலாம். ஹைதராபாத்திலிருந்து கிடைக்கும் தகவல்களால் வெளிப்படுவதும் அது தான். உண்மையில் ஹைதராபாதும், பாகிஸ்தானும் ஏதோ ஒரு அந்தரங்க திட்டப்படி வேலை செய்கின்றன. உதவி செய்வதற்கு பதிலாக ஹைதராபாதை சொந்த நலனுக்காக பிரயோஜனப் படுத்திக்கொள்ளவே பாகிஸ்தான் முயற்சிக்கின்றது. ஹைதராபாத் படைகளும், ரஜாக்கார்களும் யூனியன் சர்க்காருக்கு தொந்திரவு கொடுத்து சர்க்காரின் கவனத்தைக் கவருவதன் மூலம் காஷ்மீரில் ராணுவ உதவி அனுப்பும் வேலையை மந்தப்படுத்திவிட்டால் காஷ்மீரில் பாகிஸ்தான் வெற்றிகரமாக தாக்கமுடியுமென்பதே அவர்களுடைய திட்டமென்று தோன்றுகிறது. அநேகமாக இவ்வித அபாயத்தை தவிர்ப்பதற்காகவே இந்தியசர்க்கார் ராணுவத்தை விருத்தி செய்கின்றனர் புதிய ஆட்களை எடுப்பதுடன் பழைய ராணுவத்தினரும் சுதந்திர இந்தியப் படையினரும் கூட சேர்க்கப்படுகின்றனர்.

## பாகிஸ்தானில்

உள்நாட்டு நிலைமையால் பாகிஸ்தான் குழம்பிக்கொண்டிருப்பது உண்மை. எல்லைப்புரத்தில் செஞ்சட்டையினர் கிளர்ச்சி ஓயவில்லை யென்றும், இப்பி பக்கிரி எந்த நிமிஷமும் தாக்கக்கூடுமென்றும் நம்பத்தகுந்த இடங்களிலிருந்து கிடைத்த செய்திகளிலிருந்துதெரிகிறது. போதாக்குறைக்கு வெள்ளத்தால் ஏற்பட்ட பெருஞ் சேதம் பாகிஸ்தானை வாட்டுகின்றது.

இருந்தும் பாகிஸ்தான் காஷ்மீரில் ராணுவ உதவி அனுப்புகின்றது. காஷ்மீர் கமிஷனின் அப்பீலையும் அலட்சியம் செய்துவிட்டு தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறது. பனிகாலம் வருவதற்குள் சாத்தியமான அளவு பிரதேசத்தை ஆக்ரமித்துக்கொண்டு பிறகு சூரையிடும். கொள்கையில் இறங்க பாகிஸ்தான் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவைத் தாக்க பாகிஸ்தான் ஏற்பாடுசெய்துவருவதாக சிலர் நினைக்கின்றனர். அப்படி நடக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இதற்கு மாறாக இந்தியா படையெடுக்கப் போவதாக வதந்திகளைக் கிளப்பிவிடும் சிலர் பாகிஸ்தானிலும் இருக்கின்றனர். அதனால் பீதியடைந்து எல்லையிலுள்ளவர்கள் உள்நாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். லாஹூர் கிராமங்களிலிருந்துமட்டும் கடந்த ஒரு மாதத்தில் நாலாயிரம் பேர்களுக்குமேல் லாஹூருக்கு ஓடிவந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. குஸூர் கிராமங்களிலும் இதே நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களிடையே நம்பிக்கை உண்டாக்க மலை ஜாதி சிப்பாய்கள் எல்லை யோரங்களில் அமர்த்தப்படுகின்றனர்.

இந்திய துருப்புக்களின் கவனத்தை எல்லைகளின் பக்கம் கவர்ந்து காஷ்மீரில் போரை தீவிரப்படுத்துவதற்கு இது ஒரு சூழ்ச்சியாகவுமிருக்கலாம். இந்த நிலைமை ஏற்படுத்த பாகிஸ்தானிகள் எல்லை யோரங்களில் கொள்ளையடிக்கவும் செய்கின்றனர். இந்திய துருப்புகளும் அவ்வப்போது பதிலுக்குத் தாக்கிக்

கொள்ளைக்காரர்களை முறியடிக்கும் விஷயம் மிகச் சிலருக்குத்தான் தெரிந்திருக்கிறது இவ்வித நடவடிக்கைகளை யுத்த அபாயமென்று கொள்ளவேண்டியதில்லை.

## தென்கிழக்கு ஆசியாவில் கிளர்ச்சி

பர்மா, மலேயா, இந்தோ சைனாவில் இதுவரை கிளர்ச்சி சமாளிக்கப்படவில்லை. சர்க்கார் படைகளிடையே பீதியுண்டாக்கி காரியத்தை சாதிக்க பர்மா கம்யூனிஸ்டுகள் முயற்சிக்கின்றனர். முழு பலத்துடன் அவர்களை அடக்க முயற்சிக்கும் சர்க்கார் படைகளுக்கு குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும்கிடைத்திருப்பதாகத் தோன்றவில்லை.

தென்கிழக்கு ஆசிய கம்யூனிஸ்டுகளில் பர்மா கம்யூனிஸ்டுகளிடம் அதிக கட்டுப்பாடு காணப்படுகிறது. ஜப்பானிய யுத்தத்தின் போது தேசீயவாதிகளுடன் ஒத்துழைத்து பெருக்கிக்கொண்டிருந்த பலம் இன்று அவர்களுக்கு உதவுகின்றது. மேலும் பிரிட்டிஷ் படைகள் மலாயா போய்ச் சேருகின்றன. ஸ்காட்லாந்திலிருந்து நானூறுதேர்ச்சிபெற்ற சிப்பாய்கள் சமீபத்தில் மலாயாவுக்குப் புறப்பட்டனர். இருப்பினும் மலாயா காடுகள் கம்யூனிஸ்டுகளுக்கு சாதகமாக இருக்கின்றன. கொரில்லா தாக்குதல் நடத்திவிட்டு அவர்கள் காடுகளில் ஓடிவிடுகின்றார்கள். ஜனத் தொகையின் சீனப்பெரும்பான்மை அவர்களுடன் இருக்கிறது.

இந்தோ சைனாவில் மீண்டும் பிரெஞ்சு ஆதிக்கம் ஏற்படுத்தும் முயற்சிகளை முறியடிப்பதில் கம்யூனிஸ்டுகளின் வியட்னும் சர்க்கார் முனைந்திருக்கிறது கம்யூனிஸ்டு எதிரிகளைக்கூட ஒன்று திரட்ட பிரான்ஸினால் முடியவில்லை. சமீபத்தில் கம்யூனிஸ்டுகள் பிரெஞ்சுக்காரர்களின் ஒரு பெரிய கோஷ்டியையே தாக்கி அழித்துவிட்டனர். ஸைகோன், ஹனோயி இரண்டைத்தவிர வேறெந்த முக்கிய இடங்களிலும் பிரெஞ் சாதிக்கம் இல்லையென்றே தெரிகிறது. வியட்னும் சர்க்கார் பூரா இந்தோ சைனாவையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது.

## பர்லின் பேச்சு வார்த்தை.

ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நேச நாடுகளுக்குமிடையே நடக்கும் பேச்சுவார்த்தை ரஷ்யா பர்லின் முற்றுகையை அகற்ற இணங்கினால் நான்கு வல்லரசுகள் அல்லது அவர்களுடைய வெளிநாட்டு மந்திரிகளின் மஹாநாடு நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்பட முடியும்.

பர்லின் முற்றுகையை அகற்றுவதற்கு மேற்கு ஜெர்மனியின் தனி அரசாங்கம் அமைக்கும் திட்டத்தைமேற்கத்திய நேசநாடுகள் தயாரிக்க வேண்டுமென்றும் ரூர் தொழில் பிரதேசம் அதனிடமே ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் ஏற்கனவே ரஷ்யா நிபந்தனை விதித்திருந்தது. நிபந்தனையின் பிற்பகுதியை பிரான்ஸ் ஆட்சேபித்தது. சுய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ரூர் பிரதேசம் பிரெஞ்சுக்காரர்களுக்குத் தேவை. பிரான்ஸுக்கு நிலக்கரி தேவை. அதை ரூர் பூர்த்திசெய்ய முடியும். அதற்கு மாறாக ஜெர்மனியின் முன்னேற்றத்துக்காக ரூர் பிரதேசத்தையும் ஜெர்மனியின் எதிர்கால திட்டத்தையும் ஜெர்மன் சர்க்காரிடமே விடவேண்டுமென்று ரஷ்யா விரும்புகிறது.

ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நேச நாடுகளுக்குமிடையே உள்ள தடர்புகள் மாஸ்கோ பேச்சு வார்த்தைகளைப் பொறுத்தே இருக்கின்றன. விளைவுகளை இரண்டொரு தினங்களில் பார்க்கலாம்.

## ரஷ்யாவும் அமெரிக்காவும்.

ரஷ்ய அமெரிக்க உறவு சீர்படுமென்று நம்புவதற்கில்லை. யுத்தமேதான் பரிகாரம். யுத்தமுஸ்திப்புக்கள் பூர்த்தியாகும்வரை ரஷ்யாவை பேச்சுவார்த்தைகளில் வைத்திருப்பதும் மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் பரவாமல் தடுக்க 'டாலர் கொள்கை' அனுஷ்டிப்பதும் அமெரிக்காவின் கொள்கை

ரஷ்யாவுக்கு இது தெரியும். ஆகையால் ஒவ்வொரு மஹாநாட்டிலும் அதன் உறுதி பலமடைந்து கொண்டே வருகிறது. தன்னுடைய உறுதியால் சாத்தியமான அளவுக்கு லாபமடையவே பார்க்கின்றது.

அமெரிக்காவில் கம்யூனிஸத்தை நசுக்க பலமான முயற்சிகள் நடக்கின்றன. நியூயார்க்கிலிருந்து வெளியேற ரஷ்ய ஸ்தானிகருக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது அமெரிக்காவிலுள்ள ரஷ்யர்களை உளவு வேலைக்கு உபயோகித்ததே அதற்குக்காரணம். சில ரஷ்யர்களை அமெரிக்கா தன்னுடன் சேர்த்துக் கொண்டுமிருக்கிறது. தாய் நாட்டுக்குத்திரும்ப ரஷ்ய ஸ்தானிகர் யோஜனை கூறியதை ஏற்க அமெரிக்கா மறுத்துவிட்டது.

'ஆஸாத்'
பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:
அப்துல் சலாம், ஈரோடு.

# 'ஆஸாத்' அன்பரின் வேண்டுகோள்.

"பல விஷயங்கள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் அவை உங்களுக்கு நன்மை பயக்கக்கூடியனவாக இருக்கும்"—திரு குர்-ஆன்.

ஏராளமான நஷ்டத்தையும் சகித்துக்கொண்டு ஆஸாத் சேவை செய்துவருகின்றது. அதன் சேவை மஹத்தானது. எவ்வகுப்பினராயினும் இந்தியர்களாகிய ஒவ்வொருவரும் ஆஸாதின் சேவையை ஆதரிக்கவேண்டியதவசியம். வெள்ளையர்களும்அவர்களுடையஏஜண்டுகளும் சிருஷ்டித்துச் சென்ற சூழ்நிலையை சீக்கிரமே மாற்றி நாட்டின் அமைதி சமாதானத்தைக் காப்பாற்றி ஒற்றுமையை நிலைநாட்டி எதிர்காலத்தில்ஏற்படக்கூடிய எந்தநிலைமையையும்சமாளிக்கஇந்தியர்களைதயார்செய்யவேண்டியமுக்கியவேலை இன்னும்முடிவடையவில்லை.

தென்னாட்டில் ஆஸாதுக்கு தனிப்பட்டமுக்கியத்துவம் உண்டு. லீக் பிரசாரத்தின் விளைவாக பிரிந்திருந்த ஹிந்து முஸ்லிம் உள்ளங்களை ஆஸாதின் புரட்சிகரமான போக்கால் பிணைத்துவருகின்றது. நாட்டின் இரண்டு பெரிய சமூகங்களிடையே லீக் எழுப்பியிருந்த வெறுப்புக் கோட்டைகளை தகர்த்து தரைமட்டமாக்கி ஒற்றுமையின் புனிதமான உன்னத மாளிகையை ஆஸாத் நிர்மாணித்து வருகின்றது. மிஸ்டர் ஜின்னாவின் பொய் பிரசாரவலையில் சிக்கியிருந்த முஸ்லிம்களை மீட்டு மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையின் கீழ் ஒன்று திரட்டும் வேலையை வெற்றிகரமாகச் செய்கின்றது. தென்னாட்டின் அமைதிக்கு ஆஸாத் அவசியம். அதன் வளர்ச்சிக்காக முயற்சிப்பது நம் கடமை. ஆஸாதுக்கு உதவுவதை தேசீய சேவையாகப் பாவித்து சாத்தியமான அளவுக்கு ஹிந்து சகோதரர்கள் உதவியிருக்கின்றனர். உதவிசெய்தும் வருகின்றனர். சென்னை மாகாண காங்கிரஸ் முஸ்லிம்களில் பிரபலஸ்தரான ஹாஜி M. அப்துர்ரஹ்மான் சாஹிபைப்போன்ற ஒரு சிலரைத் தவிர ஆஸாத் போன்றதொரு பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம் பொதுமக்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இம் மாதிரியான பொது வேலைகளுக்கு ஒருசிலரின் ஆதரவுமட்டுபோதாது முஸ்லிம் சகோதரர்கள் ஆஸாதை ஆதரிக்க முன்வரவேண்டும். நாட்டுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் தீங்கிழைக்கும் வகையில் வகுப்புப்பிரசாரம்செய்யும் பத்திரிகைகளை ஆதரிப்பதால் நாட்டிற்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ நன்மையில்லை. அவ்விதப்பிரசாரத்தின் பலனை அனுபவித்தாய்விட்டது. மாறுதலடைந்திருக்கும் சூழ்நிலையின் தன்மையை தெரிந்துகொண்டு ஆஸாத் போன்ற பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம்கள் உணரவேண்டும். முடிவில் சாத்தியமான சகல துறைகளிலும் ஆஸாதை ஆதரிக்குமாறு ஹிந்து முஸ்லிம் சகோதரர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஆஸாத்" சமீபத்தில் தன் வரவு செலவு கணக்கை வெளியிடப் போவதாகத் தெரிகிறது. அதில் முஸ்லிம் நன்கொடையாளர்களுடைய பெயர்களும் உயர்ந்த ஸ்தானத்தில் இடம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

K. M. ஷரீப்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.